1. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஐ) பதவி நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர்களின் மேல் முறையீடு தொடர்பாக உச்ச நீதிமன்றம் அனுப்பியுள்ள அறிக்கையை ஏற்காமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு I want to inform the Hon. Members of this House that I have received today by post from the Supreme Court of India a notice in regard to the Appeal filed by certain expelled Members of this House against the judgement of the Madras High Court upholding the expulsion of the Members from the House, informing that the application will be iisted before the Supreme Court on 20th July 1987.

As per the Constitutional provisions and the conventions followed in this House, I feel that I cannot be and do not propose to be subjected to the authority of any Court in respect of the proceedings of this House. Hence I am not going to respond to the notice.

A similar notice has also been received by the Secretary, Legislative Assembly. I am directing him not to respond to the notice s the matter in question relates to the proceedings of the House.

However, I request the Hon. Minister for Law to instruct the Advocate-General, Tamil Nadu, to apprise the Supreme Court of the correct legal and Constitutional position in the matter.

(ஓ) சென்னை மாநகர் காவல் (மதுரை மாநகருக்கும் கோயம்புத்தூர் மாநகருக்கும் நீட்டிப்பு சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1987ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல் (மதுரை மாநகருக்கும் கோயம்புத்தூர் மாநகருக்கும் நீட்டிப்பு) சட்ட முன் வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

2. அரசினர் சட்டமுன் வடிவுகள்—தொடர்ச்சி.

சென்னை மாநகர் காவல் மதுரை மாநகருக்கும் கோயம்புத்தூர் மாநகருக்கும் நீட்டிப்பு சட்டமுன் வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987-ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல் (மதுரை மாநகருக்கும் கோயம்புத்தூர் மாநகருக்கும் நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (*சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27 1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

---

*1987 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.